உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 30.06.2026 • மலர் 04 • இதழ்: 181 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 30.06.2026 • Vol : 04 • Issue : 181 • Page : 4 • Rs. 5/-

# காலநிலை மாற்றத்தால் தீவு நாடுகள் பாதிப்பு

## செஷெ ல்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேச்சு



விக்டோரியா,ஜூன் 30

பிரதமர் நரேந்திர மோடி, செஷெல்ஸ் நாட்டுக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். இன்று அந்த நாட்டின் நாடாளு மன்றத்தில் உரையாற்றினார். இதன் மூலம், அந் நாட்டு செஷெல்ஸ் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை பெற்றார். செஷெல்ஸ் தேசிய சட்டப்பேரவையின் 8வது அமர்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியப் பெருங்கடலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், அப்பகுதியில் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் மோடி பேசியதாவது:

"இந்தியப் பெருங்கடல் இந்தியாவையும் செஷெல்ஸையும் பிரிப்பதில்லை; மாறாக இரு நாடுகளையும் இணைக்கிறது.கடல்சார்அண்டை நாடுகளாகிய நாம், ஒரு நாட்டின் பாதுகாப்பு மற்றொரு நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது என்பதை உணர்ந்துள்ளோம். ஒரு நாட்டின் வளம் மற்றொரு நாட்டின் வளத்திற்கும் பங்களிக்கிறது. பிராந்தியத்தின் நிலைத்தன்மை அனைவருக்கும் நன்மை பயக்கும்.கடல்சார் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது, பாதுகாப்பான மற்றும் நிலையான இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை உருவாக்கும் எங்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு, செஷெல்ஸ் சுதந்திரம் பெற்றபோது, இந்தியாவின் நட்பு மற்றும் ஒற்றுமையின் அடையாளமாக இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். நீலகிரி கப்பல் போர்ட் விக்டோரியாவில் நங்கூரமிட்டிருந்தது. இன்று, உங்கள் நாட்டின் பொன் விழா சுதந்திர ஆண்டை கொண்டாடும் இந்த வேளையில், ஐ.என். எஸ். இக்ஷாக் மற்றும் ஐ.என்.எஸ். தர்காஷ் கப்பல்கள் போர்ட் விக்டோரியாவில் நிறுத்தப்பட்டுள்ளன. ஐந்து தசாப்தங்கள் கடந்தாலும், செஷெல்ஸ் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு மாறவில்லை.

2015ஆம் ஆண்டு பிரதமரான பிறகு நான் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் முதன்முதலாக பயணம் மேற்கொண்ட நாடு செஷெல்ஸ். இந்தியாவின் இந்தியப் பெருங்கடல் பார்வையில் செஷெல்ஸ் முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதாக நான் நம்பியதால் இங்கு வந்தேன். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இங்கு வந்துள்ள இந்த நேரத்தில், அந்த நம்பிக்கை இன்னும் வலுவடைந்துள்ளது. உங்கள் நாட்டின் சுதந்திரத்தின் 50வது ஆண்டு விழாவில் உங்களுடன் இணைவதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். மேலும், இந்தியாசெஷெல்ஸ் இடையேயான நீண்டகால கலாசார உறவுகளை குறிப்பிட்ட பிரதமர் மோடி, பல்வேறு கலாசாரங்களை உள்ளடக்கிய செஷெல்ஸ் நாட்டின் தனித்துவத்தையும் பாராட்டினார்.



## குமரி மாவட்ட குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர், அதிகாரிகள் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.30

குமரி மாவட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின்கீழ்பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது குறித்தும், அதன் செயல்பாடுகள் குறித்த ஆய்வு பணிகள் புதுக்கடை அருகே காப்புக்காடு பகுதியில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர்பிரதாப் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தினேஷ் ஆலிவார் பொன்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அமைச்சர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி,நகராட்சிகள்,பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சுகாதாரமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் துறை அலுவலர்களுடன் கேட்டறிந்ததோடு, சீரமைக்கப்படவேண்டிய நீர் தேக்க தொட்டிகள், குழாய்கள் உள்ளிட்டவை உடனடியாக சீர் செய்து தண்ணீர் வழங்கிட செயற்பொறியாளர் உள்ளிட்டோருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் விளவங்கோடு சட்டமன்றத்திற்குட்பட்ட காப்பிக்காடு பகுதியில் தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள நீர்தேக்க தொட்டியினையும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வில்லுக்குறியை அடுத்துள்ள கொன்னக்குழிவிளை பகுதியில் உள்ள நீர் தேக்க தொட்டியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, இந்த நீர் தேக்க தொட்டியின் வாயிலாக பொதுமக்களுக்கு வழங்கப்படும்குடிநீர்முழுசுகாதாரத்துடன் வழங்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளபட்டதோடு கன்னியாகுமரி மாவட்டதிற்குட்ட நீர்தேக்கதொட்டிகளில் அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு நோய் பரவாமல் தடுக்கும் வகையில் பிளீச்சிங் பவுடர் உள்ளிட்டவை தெளித்திட பொறியாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு அறிவுறுத்தப்பட்டது. என கூறினார். நடைபெற்ற ஆய்வுகளில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் பிரவின், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர்கள் ராஜன், ஹரிகோவித், பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தவெகவின் ஆட்டம் ஜோர்... அடுத்து எந்த எம்எல்ஏ? கரூர் விஜயபாஸ்கர் ராஜினாமா குறித்து முத்துக்குமார் கேள்வி?



நாகர்கோவில்: ஜுன் 30

கரூர் எம்எல்ஏ விஜயபாஸ்கர் ராஜினாமா செய்ததை குறித்து அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் கூறியதாவது:

அதிமுகவிலிருந்து ஆறாவது எம்எல்ஏ வாக எம்.ஆர். விஜயபாஸ்கர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். எம்.ஆர். விஜயபாஸ்கர் கரூர் தொகுதி எம்எல்ஏ. மேலும் செந்தில் பாலாஜியின் எதிர்துருவம்.

சட்டமன்றத் தேர்தலில் கரூர் தொகுதியில் தவெக இரண்டாவது இடத்தை பிடித்திருந்தாலும் கூட , வெற்றி பெறவில்லையே என்கிற ஏக்கம் தவெகவினருக்கு இருக்கத்தான் செய்கிறது. இதற்கு வசமாக மாட்டிக்கொண்டவர் தான் எம்.ஆர்.வி என்று சொல்லலாம்.

தவெகவுடன் இணைப்பினை கரூரில் வைத்து கொள்ளலாமா? இல்லை பனையூரிலேயே நடத்தி விடலாமா என்பது தான் எம்ஆர்வி மனதில் இப்போது ஓடிக் கொண்டிருக்கிற கேள்வியாக இருக்கும்.

அது தான் முதலமைச்சரே சில நாட்களில் கரூருக்கு விசிட் அடிக்க போவதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறதே. ஒரேயடியாக இணைப்பு விழாவினை கரூரில் நடத்திட வேண்டியது தானே. எது எப்படியோ தவெக ஆட்டம் மட்டும் ஜோராகவே இருக்கிறது. அடுத்து எந்த எம்எல்ஏ என்று யோசிக்கும் அளவுக்கு தவெக அரசியல் சென்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சாவூர்

## பெரிய கோவிலில் பெருவுடையார் பெரியநாயகி அம்மன் திருக்கல்யாணம்; திரளான பக்தர்கள் தரிசனம்




தஞ்சாவூர் ஜூன் 30

தஞ்சாவூர் பெரிய கோவிலில் பெருவுடையார் பெரியநாயகி அம்மனுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது

இவ்விழாவை யொட்டி சொக்க நாதன் சன்னதியில் இருந்து பழங்கள், குங்குமம், மஞ்சள் கிழங் கு, மஞ்சள், திருமாங்கல்ய சரடு, வளையல், சீப்பு குங்குமச்சிமிழ், கண்ணாடி ,ரிப்பன், இனிப்பு ,பூ வெற்றிலை, பாக்கு, சீவல் ஜாக்கெட் போன்ற சீர்வரிசை பொருள்களை பக்தர்கள் மூங்கில் தட்டில் வைத்து ஊர்வலமாக புறப்பட்டுநடராஜர்மண்டபம்அருகேதிருக்கல்யாணம் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை சென்றடைந்தது

பின்னர் சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க மாப்பிள்ளை அழைப்பு உள்பட சம்பிரதாய சடங் குகள் நடைபெற்றன. தொடர்ந்து மேள தாளங்கள் முழங்க பெருவு டையாரிடம் இருந்து திருமாங்கல் யத்தை சிவாச்சாரியார் எடுத்து பெரியநாயகி அம்மனுக்கு அணிவிக்கும் நிகழ்ச்சி நடை பெற்றது .இதையடுத்து பெருவுடை யார் பெரியநாயகி அம்மன் திருக்கல்யாண கோலத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தனர்

இந்த திருமணத்தில் பங்கேற்றால் திருமண பாக்கியம், தம்பதி யர் ஒற்றுமை ,குழந்தை பாக்கியம், மாங்கல்ய பலம் ஆகியவை நிகழும் என்பது பக்தர்களின் ஐதீகம் இதனால் விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

## டீக்கடை மீது மண்ணெண்ணெய் குண்டு வீச்சு: 5 பேர் கைது

தூத்துக்குடி, ஜூன் 30

தூத்துக்குடி அருகே அத்திமரப்பட்டி பகுதியில் போலீசாரிடம் புகார் அளித்த ஆத்திரத்தில் டீக்கடை மீது மண்ணெண்ணெய் குண்டு வீசி தீ வைத்த 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடியை அடுத்த அத்திமரப்பட்டி மேல தெருவைச் சேர்ந்தவர் சிவலிங்கம் (வயது 40). இவர் அப்பகுதியில் சொந்தமாக டீக்கடை நடத்தி வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சேர்மதுரை என்பவர், போதையில் ஜெயராஜ் என்பவருக்குச் சொந்தமான ஆட்டை மிதித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து ஜெயராஜ் முத்தையாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகார் குறித்து போலீசார் விசாரணை நடத்தவந்தபோது, சேர்மதுரைஅடிக்கடி மது குடித்துவிட்டு தெருவில் உள்ளவர்களிடம் தகராறு செய்வதாக சிவலிங்கம் போலீசாரிடம் தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சேர்மதுரை, சிவலிங்கத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இந்த நிலையில், நள்ளிரவில் சேர்மதுரை மற்றும்அவருடையநண்பர்களானவெங்கடேஷ்,பாலமுருகன், முத்துராஜ், சிமியோன் ஆகிய 5 பேரும் சேர்ந்து சிவலிங்கத்தின்டீக்கடைமீதுமண்ணெண்ணெய் குண்டு வீசியுள்ளனர். இதில் டீக்கடை தீப்பற்றி எரிந்து பலத்த சேதமடைந்தது. சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் உடனடியாக விரைந்து வந்து தண்ணீரை ஊற்றித் தீயை அணைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து சிவலிங்கம் அளித்த புகாரின் பேரில், முத்தையாபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். இதையடுத்து டீக்கடையை எரித்த வழக்கில் தொடர்புடைய சேர்மதுரை, வெங்கடேஷ், பாலமுருகன், முத்துராஜ், சிமியோன் ஆகிய 5 பேரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## வேர்க்கிளம்பி யை தலைமையிடமாகக்கொண்டு இயங்கி வரும் பிருந்தாவன் சேரிட்டி டிரஸ்டின் 7.ம் கட்ட கல்வி உதவி வழங்கும் விழா



திருவட்டாறு, ஜூன்.30

திருவட்டாறு அருகே வேர்க்கிளம்பி யை தலைமையிடமாகக்கொண்டு இயங்கி வரும் பிருந்தாவன் சேரிட்டி டிரஸ்டின் 7.ம் கட்ட கலவி உதவி வழங்கும் விழா வேர்க்கிளம்பியில் டிரஸ்ட் தலைவர் எஸ். காட்சே தலைமையில் நடந்தது. ஒருங்கிணைப்பாளர் பி.எட்.வின் ராஜ் வரவேற்றார். ஜெயசிங், பேபி, ஜெபான்சிலி, கிரி சட்ட ஆலோசகர் வி.எஸ். நந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயலாளர் எம். சோபிதராஜ் அறிக்கை சமர்பித்தார். பத்மநாபபுரம் எம்.எல்.ஏ. ஆர். செல்லசுவாமி நலத்திட்ட உதவிகளை துவங்கி வைத்தார். வேர்க்கிளம்பி பேரூராட்சிதலைவர்சுஜீர்ஜெபசிங்குமார், துணைத்தலைவர் துரைராஜ் மனுவேல்,. பசித்தோர்க்கு உணவு அறக்கட்டளை தலைவர் கருங்கல் ஜார்ஜ், பயிற்சியாளார் சேவியர் சுரேஷ்பாபு,

செருப்பாலூர் கிருபா சேரிட்டப்பிள் டிரஸ் நிறுவனர் ஆர். பிராங்கிளின், திருவட்டார் காவல்நிலைய சப்இன்ஸ்பெக்டர் எஸ். சிவசங்கர், குழித்துறை மறைமாவட்ட அனைத்து பணிக்குழுக்களின் இயக்குநர் பங்குப்பணியாளர் என். மார்டின். ஆகியோர் பேசினர்.

நிகழ்வில் டிரஸ்டின் இலவச டியூஷன் மையத்தில் பயின்று 10ம் வகுப்பில் 481 மதிப்பெண் பெற்ற தனிகா என்ற மாணவிக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது . டிரஸ்ட் பொருளாளர் சுஜின் லோகிதாஸ் நன்றி கூறினார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன் அவர்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஸ்ரீவாரி மஹாலில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனுக்கள் பெறும் முகாம் நடைபெற்றது. அப்போது பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பெற்று, குறைகளை கேட்டறிந்தார். இதில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஹரிபாஸ்கர், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், கோபி வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா மற்றும் ஈரோடு கிழக்கு மாவட்ட த வெ க செயலாளர் விஜய் வெங்கடேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்,

## மக்கள் குறை தீர்வுநாள் கூட்டம்: நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் வழங்கினார்



திருப்பத்தூர்:ஜூன்:30,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் முதன்மை திட்டமான உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வர பெற்ற மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

மேலும் வருவாய் துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை, வனத்துறை, நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை, கூட்டுறவு கடனுதவி, தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் சார்பாக வீடுகள் வேண்டி, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள், மருத்துவத்துறை, கிராம பொதுப்பிரச்சனைகள், குடிநீர் வசதி மற்றும் பொது நலன் குறித்த மனுக்கள் என மொத்தம் 483 கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இதனைத்தொடர்ந்து, மக்கள்குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்சார்பில், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285/ மதிப்பிலான காதொலி கருவி, 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ 8,000/ மதிப்பிலான சக்கர நாற்காலி, 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,500/ மதிப்பிலான சிறப்பு சக்கர நாற்காலி, 05 மாற்றுத்திறனாளிக்கு தலா ரூ.14,500/மதிப்பிலான கைத்திறன்பேசி என மொத்தம் 06 நபர்களுக்கு ரூ.93,265/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருபூஷணகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் மகாதேவன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

### திருப்பத்தூர் அடுத்த சௌளூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில்

## முடிவுறாத தரை பாலத்தை விரைந்து முடிக்க கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக ஆர்வலர் கோரிக்கை மனு



திருப்பத்தூர்:ஜூன்:30

திருப்பத்தூர் மாவட்டம் புதுக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட சௌளூர் கிராமத்தில் முடிவு பெறாத தரைப்பாலத்தினை விரைவில் பணியினை முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சமூக ஆர்வலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் விரைவாக தரைப்பாலத்தின் பணியினை முடிக்க கோரி பல முறை ஊர் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தும் பணியினை மேற்கொள்ளமால் அலட்சியம் செய்து வருவதாக கூறுகின்றனர்.

மேலும் 2022 -2023 MGNREGS திட்டத்தின் கீழ் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி துவங்கப்பட்டது. ஆனால் இது வரை முடிக்காமல் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மற்றும் அதிகாரிகள் அலட்சியம் காட்டுவதாக கூறுகின்றனர். தரைப் பாலத்தின் பணி 90% முடிந்ததாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்விற்கு சென்ற நிலையில் தெரிவித்துள்ளார் ஆனால் அதே சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் தகவலை மனுதாரர் கேட்டபோது தரைப் பாலத்தின் பணி முழுமையாக முடிவு பெற்றுள்ளது என திடுக்கிடும் தகவலை தெரிவிக்கின்றனர்.

முடிவுறாத பணிக்கு எப்படி காசோலை அல்லது கணக்குகளை முடித்தார்கள் என்பது மனுதாரரின் கேள்வியாக உள்ளது. இந்நிலையில் தரைப் பாலத்தின் பணியினை முடிக்க வேண்டும். இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தினை வெளிப்படையாக வெளியிட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

## பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்கள் கைது



ஆறுமுகநேரி, ஜூன் 30

ஆறுமுகநேரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மூலக்கரை ரோடு ஓரத்திலுள்ள ஒரு கோவில் அருகில் பணம் வைத்த சூதாடத்தில் ஈடுபட்ட 6 நபர்கள் கைது : ஆறுமுகநேரிகாவல்நிலையஉதவிஆய்வாளர்இருதயராஜ் வழக்கு பதிவு செய்து பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட குரும்பூர் பகுதியை சேர்ந்தவர்களான சிவஞான மகன் முருகன் (39), சுப்பிரமணியன் மகன் மாடசாமி (42), ஆறுமுகநேரி பகுதியை சேர்ந்தவர்களான சாமி மகன் வாசுதேவன் (62), செலஸ்டின் மகன் ரெக்ஸ்டன் (31), ராமசாமி மகன் அழகர் (44) மற்றும் ராஜபாண்டி மகன் புறா முருகன் (68) ஆகியோர்களை கைது செய்து அவர்களிடமிருந்து சீட்டு கட்டுகள் மற்றும் ரூபாய் 31,240/ பணம் ஆகியவற்றை பறிமுதல் செய்தார்.



## தமிழக அரசு பால் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்

### தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் வலியுறுத்தல்

கிருஷ்ணகிரி, ஜூன் 30

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் தமிழக விவசாய சங்கத்தின் ஜூலை 5ஆம் தேதி நடைபெற உள்ள பேரணி மற்றும் பொதுக்கூட்டம் தொடர்பான அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது,

மாவட்டஇளைஞர் அணி துணைச் செயலாளர் ராஜ தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்ட பொதுச் செயலாளர் அனுமந்தராசு வரவேற்புரை ஆற்றிய மேலும் இக்கட்டத்தில் தமிழக விவசாய சங்கத்தினை சார்ந்த ராஜீவ் காந்தி, மாசிலாமணி, ராதாகிருஷ்ணன், சுயம்பு, சுப்பிரமணியன், கோவிந்தராஜ், அண்ணாதுரை,வடிவேல், பெருமாள் ,கிருஷ்ணமூர்த்தி, பார்த்திபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

மேலும் இக் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழக விவசாய சங்கத்தின் மாநில தலைவர் ராம கவுண்டர் கலந்து கொண்டு கூட்டத்தில் நிறைவேற்றுள்ள தீர்மானங்கள் குறித்து சிறப்புரை ஆற்றினார், இதனைத் தொடர்ந்து பேசிய இரமிகவுண்டர் தமிழக முதல்வர் தேர்தல் அறிக்கைகள் பால் நிலையை உயர்த்தி தருவதாக குறிப்பிட்டர், ஆனால் வரை பாலுக்கான விலையை உயத்தப்பட வில்லை,ஆனால் தனியார் பாலின் விலை உயர்ந்த வண்ணம் உள்ளது.

கரவை மாடுகளின் விலையும் உயர்ந்த நிலையில் ஆவின் பாலுக்கான விலையும் உயரவே இல்லை இதே நிலை நீடித்தால் ஆவினுக்கு பால் ஊற்றுவதை நிறுத்தி விட்டு தனியாருக்கு பால் ஊற்றும் நிலை ஏற்படும் ஆகையால் தமிழக அரசு உடனடியாக லிட்டர் பாலுக்கு ரூ.10 உயர்ந்தி வழங்க முன்வர வேண்டும்,

ஏலகிரி மலையில் இருந்து வரும் தண்ணீரை பெரியதள்ளபாடி என்ற இடத்தில் தடுப்பணை கட்டி நிலத்தடி தண்ணீரை பெருக்க வேண்டும்,தென்பெண்ணை பாலாறு இணைப்பு திட்டம் பிரிட்டிஷ் காலத்தில் கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்தை செயல்படுத்த கடந்த 10 ஆண்டுகள் முன்பு சர்வே செய்யப்பட்டு அதற்காக ரூ 9,500 கோடி மதிப்பீடு செய்யப்பட்டது, ஆனால் இதுவரை அந்த பணிகள் தொடங்கப்படவில்லை ஆகையால் இந்த திட்டத்தை மத்திய மாநில அரசுகள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும், தமிழக அரசு தேர்தல் அறிக்கையின்டி பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் வருகின்ற ஜூலை 5ம் தேதி கிருஷ்ணகிரியில் நடைபெறும் உழவர் தின பேரணியில் விவசாயிகள் பெருந்துறை கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## சேலம் மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



சேலம், ஜூன் 30

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று நேற்று 29.06.2026 நடைபெற்ற சேலம் மாவட்ட பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முதியோர் உதவி தொகை, இலவச வீட்டு மனை, பட்டா மாறுதல், சாதி சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 654 மனுக்கள் வர பெற்றது. இதில் மாற்றுத் திறனாளிகள் 13 பேர் மனுக்களை அளித்தனர். மேற்படி மனுக்கள் மீது உரிய நடவடிக்கையை மேற்கொள்ள தொடர்பு டைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

## இந்து முன்னணி சார்பில் இந்து சாம்ராஜ்ய தின விழா




ஈரோடு ஜூன் 30

இந்து முன்னணி சார்பில் திண்டல் நகர் சார்பாக இந்து சாம்ராஜ்ய தின விழா திண்டல் பேருந்து நிறுத்தத்தில் கொண்டாடப்பட்டது நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர்வக்கீல் முரளி மற்றும் திண்டல் நகர பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்

இதேபோல ஈரோடு மாநகர் மாவட்டம் இந்து அன்னையர் முன்னணி சார்பாகவும், ஈரோடு கருங்கல்பாளையம் சின்ன மாரியம்மன் கோவில் அருகிலும், ஆர் .என். புதூர் நகர் கலைஞர் நகரிலும் , ஈரோடு வீரப்பன் சத்திரம் நகர லட்சுமி நகர் கிளை சார்பாகவும் இந்து சாம்ராஜ் விழா நடைபெற்றது.

## பல்சமய நட்புறவு கழகத்தின் மாவட்ட நிர்வாகிகள் தெற்கு த.வெ.க. சட்டமன்ற உறுப்பினரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்



திருப்பூர்:ஜூன்30

திருப்பூர் தெற்கு சட்டமன்ற அலுவலகத்தில் பல்சமயநட்புறவு கழகம் மாவட்ட மகளிர் அணி தலைவி மேகலா தலைமையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் □.பாலமுருகன் அவர்களை சந்தித்து முதல் சட்டமன்றத் தொடர் சிறப்பாக நடைபெற்றதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைவர் ஷாஜகான் மாவட்ட பொறுப்பாளர் அக்கீம் மாவட்ட பொருளாளர் செல்வகுமார் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்ட துணைச் செயலாளர் அர்ஷத் அலி மாநகர வர்த்தக அணி பொறுப்பாளர் தங்ராஜ் மாவட்ட மகளிர் அணி செயலாளர் சித்ரா திருப்பூர் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் பழனிசாமி

திருப்பூர் தெற்கு இளைஞரணி பிரம்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகர்கோவிலில்

## தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பதவி ஏற்பு மற்றும் நிர்வாகிகள் அறிமுக விழா



கன்னியாகுமரி, ஜூன் 30

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பதவி ஏற்பு மற்றும் நிர்வாகிகள் அறிமுக விழா நாகர்கோவிலில் நடைபெற்றது

கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் பதவியேற்பு மற்றும் அறிமுக விழா நாகர்கோவில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் நெல்லை தூத்துக்குடி குமரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் மாநிலத் தலைவர் கொளத்தூர் ரவி குத்துவிளக்கு ஏற்றி வைத்து பின்னர் எழுச்சி உரையாற்றினார் மாவட்டத் தலைவர் குமரன் நாகேந்திரன் மற்றும் மாவட்டச் செயலாளர் கோபுராஜ் தலைமை வகித்தனர்பின்னர்புதியநிர்வாகிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மேரி பிரின்சி லதா மற்றும் சரவண சுப்பையா ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார் பின்னர் மாநிலத் தலைவர் கொளத்தூர் ரவி செய்தியாளர்களிடம் கூறும் போது புதிதாக அமைந்துள்ள தமிழக அரசுக்கு நமது சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது மேலும் மறைந்த வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன் அவர்களுக்கு சிலை வைக்க வேண்டும் இது போன்ற 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் கிழக்கு மாவட்ட தலைவர் கண்ணன் மாவட்ட பொருளாளர் சுபாஷ் மத்திய மாவட்ட இளைஞரணி தலைவர் திலீப் குமார் தூத்துக்குடி புறநகர் தலைவர் ஜான் ராஜா நெல்லை தெற்கு மாவட்ட தலைவர் லிங்க சித்திரை மற்றும் நிர்வாகிகள் மகளிர் அணி தலைவி பத்மாவதி மகளிர் அணி செயலாளர் பெமிஅருண் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## கிருஷ்ணகிரியில்

# சேலஞ்ச் கோச்சிங் சென்டர் சார்பில் முப்பெரும் விழா



கிருஷ்ணகிரி ஜூன் 30

கிருஷ்ணகிரி நகரில் 2009 முதல் செயல்பட்டு வரும் சேலஞ்ச் கோச்சிங் சென்டர் சார்பில் முதல்வர் ஜோசப் விஜயின் பிறந்தநாள் விழா, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு துணைத் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்கு தேர்வு கூட நுழைவுச்சீட்டு வழங்குதல், சிறப்பு மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரண பொருட்கள் வழங்குதல் ஆகிய முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், 10 மற்றும் 12ஆம் வகுப்பு துணைத்தேர்வு எழுதும் மாணவ–மாணவிகளுக்கு தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகள் (Hall Ticket) வழங்கப்பட்டதுடன், கல்வி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழக வெற்றிக்கழக மத்திய மாவட்ட செயலாளர் ஜி.சுரேஷ், கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர். முரளிவிஜய், நகரத் தலைவர்சசிகுமார், மாவட்ட மருத்துவர்அணி செயலாளர் டாக்டர் ஜி.பார்த்திபன் மற்றும் காப்பாட்சியர் சி. சிவக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தி, தேர்வில் சிறப்பாக வெற்றி பெற வாழ்த்துகளைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியை சேலஞ்ச்கோச்சிங்சென்டர்நிறுவனர்எஸ்.மோகன்குமார், ஒருங்கிணைத்து நடத்தினார். கடந்த 17 ஆண்டுகளாக கல்விச்சேவையில் சிறப்பாக செயல்பட்டு வரும் சேலஞ்ச் கோச்சிங் சென்டரின் இந்த முயற்சிக்கு மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.இந்தஇந்தநிகழ்ச்சியில்கழகநிர்வாகிகளான வேலன், சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதுகுளத்தூர் கமுதி வட்டங்களில்

# போலியோ சொட்டு மருந்து வழங்கல்



கமுதி, ஜூன் 29

ராமநாதபுரம் மாவட்டத்தின் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய மூன்று வட்டங்களிலும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய போலியோ சொட்டு மருந்து முகாமில் மொத்தம் 24,072 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. கமுதி வட்டத்தில் வட்டார தலைமை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் ரோகினி தலைமையில், 135 மையங்களில் 5 வயதிற்குட்பட்ட 7,743 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. மேலராமநதி மருத்துவ அலுவலர் டாக்டர் சாரு, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சதி ஷ்குமார் உள்ளிட்ட சுகாதாரப் கலந்து பணியாளர்கள் கொண்டனர்.

முதுகுளத்தூர் வட்டத்தில் 100 மையங்களில் 6,284 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது

முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முகாமை வட்டாட்சியர் கோகுல்நாத் தொடங்கி வைத்தார்.

வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் நிவேதிதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

கடலாடி வட்டத்தில் வட்டார தலைமை மருத்துவ அலுவலர்டாக்டர்மு. ராமச்சந்திரன்தலைமையில் 198 மையங்களில் நம்பிக்கை என்பது வீடும் பூவாக10,045 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. கடலாடி, சாயல்குடி, சிக்கல், வாலிநோக்கம், மேலக்கிடாரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கட்டடங்களில் முகாம்கள் நடைபெற்றன.

# சேலம் மாநகராட்சியின் மாமன்ற கூட்டம்



சேலம், ஜூன் 30

சேலம் மாநகராட்சி மாமன்ற கூட்டம்நேற்று 29.6.2026 காலை 11 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சேலம் மேயர் ராமச்சந்திரன் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் சேலம் மாநகராட்சியின் துணை மேயர் சாரதா தேவி தனக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை என்று கூட்ட அரங்கில் இருந்து வெளிநடப்பு செய்தார்.அதன் பிறகு மாமன்ற கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டம் நடைபெற்ற மன்ற அரங்கில் தமிழக முதல்வர் விஜய் புகைப்படம் மட்டும் இருந்தது. உடன்திமுககவுன்சிலர்கள்முன்னாள்முதல்வர் ஸ்டாலின் புகைப்படத்தையும், அதிமுக கவுன்சிலர்கள் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் புகைப்படத்தையும் கூட்டம் நடைபெற்ற அரங்கில் மாட்டினர்.




## பாப்பாரப்பட்டி பேரூராட்சி தவெக சார்பில்

# முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு கல்வி விருதுகள் வழங்கும் விழா மற்றும் 52 கிலோ கேக் வெட்டி கொண்டாடினர்

தருமபுரி ஜூன் 30

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி பேரூராட்சி தவெக சார்பில் முதலமைச்சர் சி.ஜோசப் விஜயின் 52 வது பிறந்தநாளை வெகு விமர்சியாக கொண்டாடினர்.

பாப்பாரப்பட்டி நகர செயலாளர் ரமேஷ் தலைமையில் அந்த பகுதியில் அரசு மற்றும் தனியார் பள்ளியில் 10 ம் மற்றும் 12 ம் வகுப்பு பொதுத் தேர்வில், பள்ளியில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு கல்வி விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் மாணவ, மாணவிகளுக்கு பொன்னாடை அணிவித்தும், பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டினர்.

இதனைத் தொடர்ந்து 52 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி பொது மக்களுக்கு வழங்கி, பிறந்த நாளை கொண்டாடினர். இந்த நிகழ்ச்சி பென்னாகரம் ஒன்றிய செயலாளர் ரஞ்சித், பாலக்கோடு ஒன்றிய செயலாளர் குமார், கொள்கை பரப்பு மாவட்ட அமைப்பாளர் சந்தோஷ், பாப்பாரப்பட்டி தவெக நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில்

# ஸ்ரீ அங்காளம்மன் பாரா மெடிக்கல் மருத்துவ துணை சார்ந்த படிப்புகள் நிறுவனம் முதலாம் ஆண்டு வகுப்பு துவக்க விழா



தருமபுரி ஜூன் 30

தருமபுரியில் ஸ்ரீ அங்காளம்மன் பாரா மெடிக்கல் மருத்துவ துணை சார்ந்த படிப்புகள் நிறுவனம் முதலாம் ஆண்டு வகுப்பு துவக்க விழா நடைபெற்றது.

தருமபுரியில் உள்ள தனியார் கல்லூரிகளில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஸ்ரீ அங்காளம்மன் பாரா மெடிக்கல் மருத்துவமனை துணை சார்ந்த படிப்புகள் நிறுவனம் சார்பில் முதலாம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னதாக கல்லூரி தாளாளர் சிலம்பரசன் வரவேற்புரை வழங்கினார்.

இதில்முதலாம்ஆண்டுமாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கேக் வெட்டி மாணவர்களை வரவேற்றினார்கள். இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கூறுகையில் சென்ற வருடம் மருத்துவத் துணை சார்ந்த படிப்புகள் சார்பில் பல்வேறு அமைப்புகள் மற்றும் மருத்துவமனை சார்ந்த மருத்துவ முகாம் மற்றும் அரசாங்க சம்பந்தப்பட்ட முகாம்களை பங்கேற்றது எங்களுக்கு பயனுள்ளதாக இருந்ததாக கூறினார்கள்.

அதேபோல் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் பல்வேறு முகாம்களை அழைத்துச் சென்று பார்வையிடுமாறு இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம் என்று மாணவர் கூறினார். இறுதியாக இரண்டாம் ஆண்டு மாணவி கமலா நன்றி கூறினார். இதில் கல்லூரிஆசிரியர்கள்,மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்.



## தூத்துக்குடியில்

# அமைச்சர் சரத்குமாரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்: 200க்கும் மேற்பட்ட திமுகவினரை போலீசார் கைது

தூத்துக்குடி, ஜூன் 30

பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக எழுந்த சர்ச்சையின் அடிப்படையில், அமைச்சர் சரத்குமாரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தித் தூத்துக்குடியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற 200க்கும் மேற்பட்ட திமுகவினரை போலீசார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அமைச்சர் சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று வெளியாகிப் பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த பழைய வீடியோ தொடர்பாக அவர் ஒரு விளக்க வீடியோவையும் வெளியிட்டிருந்தார். ஆனால், அவரது அந்த விளக்கமும் பொதுவெளியில் கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. இதைத் தொடர்ந்து, அமைச்சரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி திமுக மாணவர் அணியினர் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்குக் காவல் துறை தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், தடையை மீறித் தூத்துக்குடி டூவி புரத்தில் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சீனிவாசன் மற்றும் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அருண்குமார் ஆகியோர் தலைமையில் திமுகவினர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர். ஆர்ப்பாட்டத்தில் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கனகராஜ், கோகுல், ஆகாஷ், பிரதீபா, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் வினோத், துணை அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் ரவீந்திரன் உட்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதனையடுத்து, தூத்துக்குடி டவுன் காவல் கண்காணிப்பாளர் சுனில் தலைமையிலான காவல்துறையினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற அனைவரையும் அதிரடியாகக் கைது செய்தனர். அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## தருமபுரி மாவட்ட ஒருங்கிணைந்த திமுக மாணவரணி சார்பில்

# போதைப்பொருள் விவகாரத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுப்பு காரணமாக 100க்கும் மேற்பட்டோர் கைது



தருமபுரி ஜூன் 30

தருமபுரி மாவட்ட ஒருங்கிணைந்த திமுக மாணவரணி சார்பில் தமிழக வெற்றிக்கழகத்தின்அமைச்சர்சரத்குமார்பொது வெளியில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக கூறப்படும் விவகாரத்தை கண்டித்து, தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு,மாவட்டதிமுகநிர்வாகிகள் மற்றும் கட்சி பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர்கள் ஆ .மணி எம்பி, பி. பழனியப்பன் ஆகியோர் தலைமை ஏற்று நடைபெற இருந்த நிலையில், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடும் என்ற காரணத்தால் காவல்துறை சார்பில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இருப்பினும், திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே திரண்டனர்.

இதையடுத்து, காவல்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை கைது செய்தனர். இதில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தர்மசெல்வன், நகர செயலாளர் நாட்டார் மாது, மாணவரணி அன்பரசன், சுந்தர் ,இளைஞரணி சிவகுரு, அசோக் குமார், கலைச்செல்வன் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் அருகிலுள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். இந்த சம்பவம் தருமபுரி நகரில் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போதைப்பொருள் பயன்பாடு தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், பொது வாழ்க்கையில் இருப்பவர்கள்சமூகத்திற்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று திமுகவினர் வலியுறுத்தினர்.

## பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக எழுந்த சர்ச்சை:

# அமைச்சர் சரத்குமாரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி கிருஷ்ணகிரியில் திமுக மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்:100க்கும் மேற்பட்ட திமுகவினர் கைது



கிருஷ்ணகிரி ஜூன் 30

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோவானது சமூக வலைதளத்தில் வைரலானதை தொடர்ந்து த.வெ.க அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி திமுக மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்பாட்டமானது, திமுக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின், கி5ஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன், மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி, ஆகியோரின் வழிகாட்டுதலின்படி கழக மாணவர் அணியின் சார்பில் தமிழக வெற்றி கழக அரசின் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் பொதுவெளியில் போதைப்பொருள் பயன்படுத்தியதை கண்டித்து, கிருஷ்ணகிரி டான்சி வளாகத்தில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் மாணவரணி அமைப்பாளர் ஜெய் என்கிற ஜெயேந்திரன் டி.சி.ஆர் தினேஷ்ராஜன், தலைமையில் நடைபெற்றது., "

அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும்", "தமிழக அரசு இதுகுறித்து விளக்கம் அளிக்க வேண்டும்" என்று முழக்கங்களை எழுப்பி, அரசுக்கு எதிராக கடும் கண்டனங்களை தெரிவித்தனர். இதனால் அப்பகுதி முழுவதும் பரபரப்பான சூழல் நிலவியது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் பாத்தகோட்டா சீனிவாசன், மேற்கு மாவட்ட கழக செயலாளர் ஒய்.பிரகாஷ், கிருஷ்ணகிரி நகர செயலாளரான அஸ்லாம் ரகுமான் ஷெரிப், வேலுமணி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் நாராயணன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன், மூன்றம்பட்டி குமரேசன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், வசந்தரசு, செந்தில், சாந்த மூர்த்தி, இளையராஜா, கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், ராமச்சந்திரன், ஹரிகரன், உமாபதி, சத்யராஜ், ஒன்றிய கழக துணை செயலாளர் ஜெயச்சந்திர பாண்டியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மோகன், மாணவரணி அமைப்பாளர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், உள்ளிட்ட ஏராளமான திமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில்

# ஈராக், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் மட்டும் விளைவிக்கப்படும் பேரிச்சம்பழம் கன்றுகளை வைத்து அமோக விளைச்சல் காணும் விவசாயி



தருமபுரி ஜூன் 30

தருமபுரி மாவட்டம் அரியாகுளத்தில் நிஜாமுதீன் (வயது 68) என்ற விவசாயி பயிரிட்டு, கடும் வறட்சியிலும் அமோக விளைச்சலை பெற்றுள்ளார். சவுதி அரேபியாவில் பேரிச்சை பண்ணையில் பல ஆண்டுகளாக பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையில், வெளிநாடுகளில் இருந்து பேரிச்சை கன்றுகளை இறக்குமதி செய்து, தன் நிலத்தில் பயிரிட்டார். சில ஆண்டுகளில் நல்லவிளைச்சல்கிடைத்ததைதொடர்ந்து, அவருடைய நிலத்தில், 15 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்கிறார். அதில் பர்ரி, கான்ஜி, நுார் போன்ற திசு வளர்ப்பு செடி, தருமபுரியின் கடும் வறட்சியை தாங்கி நல்ல விளைச்சலை தந்துள்ளது. நிஜாமுதீன் கூறியதாவது. ஒரு கிலோ பேரிச்சை பழம் ரூ. 200 முதல், ரூ.600 வரைமொத்தவியாபாரிகள்,பண்ணைக்கே வந்து வாங்கி செல்கின்றனர். இந்த மரங்கள், 90 ஆண்டுகள் வரை காய்க்கும் தன்மை கொண்டது.

பேரிச்சை சாகுபடியை ஊக்கப்படுத்த தமிழக அரசு மானியத்தை ஏற்படுத்தி தர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### சுசீந்திரம் அருகே

# தலையில் கல்லை தூக்கி போட்டு வாலிபர் கொலை: தொழிலாளி கைது



நாகர்கோவில், ஜூன். 30

குமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே உள்ள ஒரு தனியார் பள்ளியில் கட்டுமான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த பணியில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சேர்ந்த சரவணகுமார் (35), மதுரை மாவட்டம் தங்கபாண்டியன் (40) உள்ளிட்ட பலர் வேலை செய்து வருகின்றார்கள். நேற்று முன்தினம் மாலை பணி முடிந்ததும் அவர்கள் இருவரும் மது அருந்தி உள்ளனர். அப்போது இருவருக்கும் இடையே திடீரென தகராறு ஏற்பட்டுள்ளது. பின்னர் கைகலப்பாக மாறிய நிலையில் சக தொழிலாளர்கள் தலையிட்டு அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

பின்னர் தங்கபாண்டியனை அவரது சொந்த ஊருக்கு செல்ல அறிவுறுத்தி, அவரைநாகர்கோவில்ரயில்நிலையத்திற்கு சக தொழிலாளர்கள் அழைத்து சென்றுள்ளனர். ஆனால் நெல்லையில் நடைபெறும் ரயில்வே யார்டு பணிக்காக ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருந்ததால், அவரால் ஊருக்கு செல்ல முடியவில்லை. இதனால் தங்கபாண்டியன் மீண்டும் கட்டுமான பணி நடைபெறும் பள்ளி வளாகத்திற்கு திரும்பி வந்தார்.

அப்போது அங்கு சரவணகுமார் தூங்கிக் கொண்டிருந்தார். இதை பார்த்து ஆத்திரம் அடைந்த தங்கபாண்டியன் அங்கிருந்த சிமெண்ட் கல் எடுத்து சரவணகுமாரின் தலையில் அடித்தார். இதனால் அவர் சம்பவ இடத்திலேயேபரிதாபமாகஉயிரிழந்தார். இதை அடுத்து தங்கபாண்டி நன்கு இருந்து தப்பி ஓடி விட்டார்.

இது குறித்த தகவல் அறிந்ததும் சுசீந்திரம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி, சரவணன் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் தப்பி ஓடிய தங்க பாண்டியனை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த நிலையில் தங்கபாண்டியன் சொந்த ஊருக்கு தப்பிக்க முயன்றது தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து பஸ் நிலையம் சென்ற தனிப்படையினர் அங்கு பஸ்ஸுக்காக காத்து நின்ற தங்கபாண்டியனை மடக்கி பிடித்து கைது செய்தனர்.

அவரை சுசீந்திரம் போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் மது அருந்திய போது ஏற்பட்ட தகராறில் சரவணகுமார் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதால் ஆத்திரமடைந்து தாக்கியதை தங்க வேண்டி ஒப்புக்கொண்டார். பின்னர் தங்க பாண்டியனை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர்.

# தமிழ்நாடு காப்பான் பூச்சி ஜனதா கட்சி (TNCJP)யின் கொடி அறிமுகம்




சென்னை, ஜூன் 30

தமிழ்நாடு கரப்பான் பூச்சி கட்சி (TNCJP) யின் கொடி அறிமுகம் மற்றும் மாநிலம், மாவட்ட வாரியாக நிர்வாகிகளுக்கு பொறுப்புகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதில் 100 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

மாநிலத்தலைவர்சி.பிரம்மாபாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் செயலாளர் பி.சிவக்குமார், பொருளாளரும் தலைமை ஒருங்கிணைப்பாளருமான ஆர்.ஜனார்த்த னன், துணைத் தலைவர் கிருஷ்ணகுமார், இணைச் செயலாளர் பாலாஜி , துணைச்செயலாளர் ஜோசப் பெத்தானி யேல், மாநில கொள்கை பரப்புச்செயலாளார் விஜய் டிவி கலையரசன் மற்றும் மாநில பிற அணியினர் கலந்து கொண்டனர். அப்போது தமிழ்நாடு CJP கட்சியின் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்திய அளவில் கரப்பான் பூச்சி ஜனதா ஒரு இயக்கமாக உள்ளது. தேசிய அளவில் ஒரு மாற்றம் வேண்டுமென்றால் ஒரு அரசியல் கட்சியாக செயல்பட வேண்டியது அவசியம். அதன் காரணமாக தமிழ்நாட்டில் ஒரு கட்சியாக உருவாக்கியிருக்கிறோம். தேசிய அளவில் உள்ள சிஜேபி இயக்கமும் எங்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக தற்போது எங்கள் கட்சியின் கொள்கையை வரைவு செய்திருக்கிறோம். அதில் முக்கியமாக ஊழலற்ற வெளிப்படை தன்மையுடன் கூடிய நல்லாட்சி . நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, சமூக நீதியை நிலை நாட்டுவது, சாதிவாரி இட ஒதுக்கீடு, பெண்களுக்கான 50 சதவீத இடதுக்கீடு நீட் தேர்வு ரத்து. இருமொழி கொள்கை ஆகியவை எங்கள் கட்சியின் கொள்கைகள் ஆகும்.

மேலும்,தமிழக முதல்வர் செயல்பாடுகள் பற்றிய கேள்விக்கு அவர் பதிலளித்ததாவது:

நாங்கள் ஆட்சி வந்தால் ஊழலை முற்றிலுமாக ஒழிப்போம் என்று கூறிவிட்டு, இன்று மாற்று கட்சியில் இருந்த ஊழல் பேர்வழிகளை தன் கட்சியில் இணைத்து கொண்டிருக்கிறார். இது போன்ற செயல்பாடுகள் மூலம் ஊழலை ஒழிப்போம் என்று சொல்வது அபத்தமான ஒன்று. தமிழக முதல்வர் விஜயின் ஒரு மாத கால ஆட்சி மக்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்று அவர் தெரிவித்தார்.

# த . வெ.க.ஆட்சியின் போலி பிம்பம் ஒரு மாதத்தில் ஒதுங்கி விட்டது

## எதிர்கட்சி தலைவர் உதய நிதி ஸ்டாலின்



தஞ்சாவூர் ஜூன் 30

த.வெ.கஆட்சியின் போலி பிம்பம்கடந்தஒருமாதத்தில்நொறுங்கி விட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் நடைபெற்ற திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் பங்கேற்று அவர் மேலும் பேசியதாவது

தமிழக வெற்றி கழக ஆட்சி யின்போலி பிம்பம் கடந்த ஒரு மாதத்தில் நொறுங்கிக் கிடக்கிறது ஒவ்வொரு நாளும் இந்த ஆட்சியின் அவலம் அனைத்தையும் மக்கள் கவனித்துக் கொண்டு வருகின்றனர்

இந்த அரசின் தவறுகளை சருக்க ல்களை இளைஞர்கள் தட்டி கேட்க தொடங்கி விட்டனர் .அப்படி தட்டி கேட்கிற இளைஞர்களையும் நம்முடைய கட்சியினரையும் கைது செய்யும் வேலையை சோபா மாடல் அரசு தொடங்கியுள்ளது

தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் மின்வெட்டுநிகழ்கிறது. இதனால்விவசாயிகள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர் .தமிழ்நாட்டில் தற் போது சட்ட ஒழுங்கை ஆட்சியாளர் கள் படுகுழியில் தள்ளி உள்ளனர் சட்டப்பேரவையில் ஆளுங்கட்சியி னர் என்னென்ன கூத்துகள் நடத்தினர் என்பதை அனைவரும் தொலைக்காட்சியில் பார்த்துள் ளனர்

இது சட்டப்பேரவையா அல்லது திரையரங்கமா அல்லது படப் பிடிப்பு நடைபெறும் இடமா என கேட்கும் அளவிற்கு சட்டப்பேரவை யின் தரத்தை த.வெ.கஅரசு சிதை த்து வருகிறது .ஆனால் எதற்கெடு த்தாலும் திமுக தான் காரணம் என ஆயத்தமான ஒரு பதிலை ஆட்சி யாளர்கள் வைத்துள்ளனர். தமிழ்நாடுதற்போதுமிகப்பெரிய பேரிட ரில் சிக்கி உள்ளது .இதிலிருந்து தமிழ்நாட்டை மீட்க வேண்டியது நம்முடைய பொறுப்பு .அதற்காக நாம் அனைவரும் ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும் என்றார் உதயநிதிஸ்டாலின்

இந்த திருமண விழாவில் முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி. செழியன், வைத்திலிங்கம், எஸ் ரகுபதி , மெய்யநாதன், முன்னாள் மத்திய மந்திரி எஸ்.எஸ்.எஸ் பழனி மாணிக்கம் ,தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் துரை சந்திரசேகரன் எம் எல்ஏ ,முரசொலி எம்பி ,எம்எல்ஏக்கள் அண்ணாதுரை (பட்டுக்கோட்டை )முத்து ராஜா (புதுக்கோட்டை )முன்னாள் எம்எல் ஏக்கள் ராமச்சந்திரன், டி கே ஜி நீலமேகம் ,புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக செயலர் செல்ல பாண்டியன் உள்பட திமுக முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள் திருமண விழா ஏற்பாடுகளை தஞ்சாவூர் மாவட்ட திமுக இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் அம்மன்குடி ராஜேந்திரன் மற்றும் மணமக்க ளின் குடும்பத்தார் செய்திருந்தனர்

# பவர்பாலா பாரம்பரிய சிலம்பாட்டம் பயிற்சி கூடம் சார்பாக சிலம்பம் தொடுமுறை சண்டை பயிற்சி முகாம்



சென்னை, ஜூன் 30

பவர்பாலா பாரம்பரிய சிலம்பாட்டம் பயிற்சி கூடத்தில் Grand & gold star Dr. கிராண்ட் கோல்டு ஸ்டார் டாக்டர் .பவர் பாலா (எ)எஸ்.பாலசேகர் தலைமையில் சிலம்பம் தொடுமுறை சண்டை பயிற்சி முகாம் நீலாங்கரை வேல்ஸ பள்ளியில் நடைபெற்றது .இதில் ஆசான் முனைவர்.கே.குமார், மாஸ்டர். கே.நிஷா மற்றும் நடுவராக கே.சண்முகம், ஏ.முகிலன். எஸ். சதிஷ்குமார். இ. எழிலரசன். ஆர்.அனுஷா. எல்.எஸ்.அஜய்வேல், ஜெகன், அருண் மற்றும் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்

### ஈத்தாமொழி அருகே

# 2 தொழிலாளிகள் கொடூர கொலை மது விருந்தின் போது ஏற்பட்ட தகராறில் பயங்கரம்




நாகர்கோவில், ஜூன். 30

குமரி மாவட்டம் ஈத்தாமொழி அருகே உள்ள புதூர் அடுத்த கண்ணம்பி விளை பகுதியைச் சேர்ந்தவர் சிங்கம் (60). தென்னை கதம்பை லோடு ஏற்றும் தொழிலாளி. இவருக்கு செல்வி என்ற மனைவியும் இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளனர். பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள். சிங்கத்துக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு. அவ்வப்போது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவது வழக்கம்.

அதே பகுதியை சேர்ந்த லிங்கசாமி (49) கொத்தனார். இவருக்கு திருமணம் ஆகவில்லை. நேற்று முன்தினம் இரவு சிங்கம், லிங்கசாமி மற்றும் சிலர் சேர்ந்து அந்த பகுதியில் உள்ள ஒரு காலி மனையில் அமர்ந்து மது அருந்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று காலை அவர்கள் மது அருந்திய இடத்தில் சிங்கம், லிங்கசாமி இருவரும் கொடூரமாக கொலை செய்யப்பட்டு கிடந்தனர்.

இதில் லிங்கசாமிக்கு கல்லால் தாக்கி கழுத்து, முகம் உள்ளிட்ட இடங்களில் காயங்கள் இருந்தன. சிங்கத்தின் கழுத்து நெரிக்கப்பட்டிருந்தது. பின்தலையிலும் காயம் இருந்தது. இது குறித்து உடனடியாக ஈத்தாமொழி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தொடர்ந்து மாவட்ட எஸ்பி (பொ) திவ்யா, கன்னியாகுமரி டிஎஸ்பி ஜெயச்சந்திரன் மற்றும் ஈர்த்தாமொழி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இருவரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர். இரண்டு பேரும் கொலை செய்யப்பட்டு கிடந்த தகவல் கிடைத்ததும் அவர்கள் குடும்பத்தினர், உறவினர்கள், பொதுமக்கள் திரண்டனர்.

இதை அடுத்து அதிரடிப்படை போலீசார் அந்த பகுதியில் குவிக்கப்பட்டனர்.

இரண்டு பேர் கொலைக்கான காரணம் என்பது உடனடியாக தெரியவில்லை. மொத்தம்4பேர்சேர்ந்துமதுஅருந்தியதாக கூறப்படுகிறது. 2 பேர் கொலை செய்யப்பட்ட நிலையில், மற்ற 2 பேர் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. இதற்காக 2 தனி படைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது சந்தேகத்தின் பேரில் 2 பேரை பிடித்துள்ளனர். அவர்களிடம் விசாரணை வந்த நிலையில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சேலத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் தொடர் வேலை நிறுத்தம்

சேலம், ஜூன் 30

சேலம் கோட்டை மைதானத்தில் 29.6.2026 நேற்று கடந்த காலத்தில் சென்னையில் போராட்டம் நடத்திய தூய்மை பணியாளர்களிடம் இன்றைய முதல்வர் விஜய் நான் ஆட்சிக்கு வந்தால் தூய்மை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வேன் என்று கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற கோரியும், தமிழ்நாடு முழுவதும் உள்ள தூய்மை பணியை தனியாருக்கு தாரை வார்ப்பதை உடனே கைவிட வேண்டும் என்றும், தூய்மை பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் பல ஆண்டுகளாக சாதியால், வறுமையால், அறியாமையால், சமூகத்தால் தூய்மை பணிக்கு தள்ளப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி வழங்க வேண்டும் என்றும், ஒப்பந்த தொழிலாளர் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிஎஃப், இஎஸ்ஐ பணத்தை முறையாக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என்றும், மலம் கலந்த குப்பை கழிவுகளை கையாள் அள்ளுவதால் பல்வேறு தொற்று நோய்களுக்கு ஆளாகி இறப்பு ஏற்படுவதை தவிர்க்க வாரம் ஒருமுறை தூய்மை பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தி அவர்களின் நோய் தீர மருத்துவசதியும், அவர்களுக்கு தரமான உணவு மற்றும் வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை வழங்க வேண்டும் என்றும், தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி பணி பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் செந்தாரைகை தொழிற்சங்க சேலம் மாவட்ட செயலாளர் பூபதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டமும், தொடர் வேலை நிறுத்த போராட்டமும் நடைபெற்றது.

# மேட்டுப்பாளையத்தில் சிவா ஆவண பதிவாக புதிய அலுவலகத்தை திறந்து வைத்த திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி



கோவை ஜூன்:30

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் புதிய பத்திர பதிவு சிவா ஆவண பதிவு அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. இதனை கோவை வடக்கு மாவட்ட திமுக மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன்வெட்டி திறந்து வைத்தார். நிகழ்விற்கு வருகை புரிந்து அனைவரையும் திமுக வடக்கு மாவட்ட ஆதிதிராவிடரணி அமைப்பாளர் வழக்கறிஞர் தென்னை சிவா வரவேற்றார்.

இந்நிகழ்வில் திமுக நகர செயலாளர்கள் கூடலூர் அ.அறிவரசு,காரமடை கே.ஜி.குரு பிரசாத்,மேட்டுப்பாளையம் வடக்கு அசரப் அலி,தெற்கு முனுசாமி,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், மாவட்ட பிரதிநிதி மேடூர் கணேசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.இறுதியில் காரமடை நகர ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் வி.ஆர். பத்திரசாமி அனைவருக்கும் நன்றிகூறினார்.



# அண்ணாமலை பிரிந்து சென்றதால் பா ஜனதாவில் வெற்றிடம் ஏற்படவில்லை

## நயினார் நாகேந்திரன் பேச்சு

தஞ்சாவூர் ஜூன் 30

அண்ணாமலை பிரிந்து சென்ற தால் பா ஜனதாவில் வெற்றிடம் ஏற்படவில்லை என்றுதஞ்சாவூரில் நைனார் நாகேந்திரன் கூறினார்

தஞ்சாவூர் தெற்கு மாவட்ட பாஜக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தஞ்சாவூரில் நடைபெற்றது கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஜெய்சதீஷ் தலைமை தாங்கினார் மாவட்ட பார்வையாளர் முரளி கணேஷ் ,மாநில செயற்குழு உறுப்பினர்கள் உமாபதி, கர்ணன், மாநில என் ஜி ஓ பிரிவு செயலாளர் வக்கீல் ராஜேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் தமிழக மேலிட பார் வையாளர்கள் அரவிந்த் மேனன்,மாநிலபொதுச்செயலாளர்கருப்புமுருகானந்தம், நிர்வாகிப்பூண்டி வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்கூட்டத்தில் தமிழக பாஜனதா கட்சியின் மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் கலந்து கொண்டு பேசினார்

தமிழக சட்டசபை தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், நாங் கள் அதிமுக கூட்டணியிலேயே தொடர்ந்து இருக்கிறோம். திமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் அனைத்தும் விஜய்யுடன் இணைந் து ஆட்சியில் பங்கேற்றுள்ளன. இதனால் திமுக தற்போது தனித்து விடப்பட்டுள்ளது

அடுத்த தேர்தலில் யாருடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்பதை அகில இந்திய தலைமை முடிவு செய்யும், இருப்பினும் சட்ட சபை தேர்தலில் நாங்கள் போட்டி யிட்ட விதம் குறித்து விளக்கம் அளிக்க வேண்டியது அவசியம் அகில இந்திய தலைமையின் வலியுறுத்தலின்படி 27 தொகுதியி ல் போட்டியிட்டோம் .ஒதுக்கப்பட்ட தொகுதிகள் அனைத்தும் பொருத்தமானவை அல்ல ,இருந்தாலும் கூட்டணி தர்மத்தை மதித்து போட்டியிட்டோம்

தேர்தலில் ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றோம்அண்ணாமலைபிரிந்துசென்றதால்பாஜகவில் வெற்றிடம் ஏற்படவில்லை

பிரதமர் மோடி 12 ஆண்டுகளுக் கும் மேலாக நாட்டுக்கு சேவை செய்து, இந்தியாவை உலக பொரு ளாதாரத்தில் 4வது இடத்திற்கு கொண்டு வந்துள்ளார். அதற்கு காரணம் பிரதமர் மோடி தான் உலக நாடுகள் வியந்து பார்க்கும் தலைவ ராக மோடி திகழ்கிறார். அண்ணாமலை சென்றாலும் நைனார் நாகேந்திரன் பதிவி மாறி னாலும் யாரும் கட்சி விட்டு செல்ல மாட்டார்கள்

நான் ஜெயலலிதாவுடன் இருந்த வன் என்பதால் ஒரு அரசியல் கட்சி உருவாக்க எவ்வளவு செலவு சக்தி யும் தேவை என்பது எனக்கு நன்றா க தெரியும்

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் விரைவில் அமலுக்கு வரும் ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு வந்தால் ,தமிழகத்திலும் காவிக் கொடி ஆட்சி அமைக்கும். தமிழகத் தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் மக்களின் நேரில் சந்திப்பதில்லை மேலும் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரிகளை தொடர்ந்து நியமித்து வருகிறார். இந்த நிலை நீடித்தால் இந்து சமுதாயத்திற்கு பாதுகாக்கப்பட்ட சூழ்நிலை உருவாகும். இவ்வாறு அவர் கூறினார்

# ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் ஊர் பொதுமக்கள் கூட்டம் ஊர் கவுண்டராக பிரேம் ஆனந்த் ஒருமனதாக தேர்வு



திருப்பத்தூர்:ஜூன்:30

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை இடையம் பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ மாரியம்மன் கோவில் வளாகத்தில் ஊர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டமானது தேவராஜ் தலைமையில் நடைபெற்றது. ஜெயச்சந்திரன், பத்மநாபன், சாந்தி மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் நடைப்பெற்ற இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன. ஊர் கவுண்டராக விருப்பம் தெரிவித்த பிரேம் ஆனந்த் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஊர் பொதுமக்கள், கோவில் குழுவினர் மாலை அணிவித்து, பட்டாசு வெடித்து , மேள தாளத்துடன் ஊர்வலமாக சென்றனர். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர் கவுண்டர் ஆறு ஆண்டுகளுக்கு பொறுப்பினை வகிப்பார்.

தினதமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.